
# வேத பாரதி

## செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL    Tamil Monthly    தமிழ் மாத இதழ்

| | | | |
|---|---|---|---|
| மலர் : 8 | இதழ் :10 | ஜுலை : 2024 | ரூ.20/- |
| Volume: 8 | Issue : 10 | July : 2024 | Rs.20/- |



# SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



## அஷ்டோத்ர ஸத சுக்ர வார ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**96வது பாராயணம் - 07.06.2024 வெள்ளிக்கிழமை**
அருள்மிகு கருமாரியம்மன் திருக்கோவில்
103, பத்மநாபா நகர், குரோம்பேட்டை.

**97வது பாராயணம் - 14.06.2024 வெள்ளிக்கிழமை**
அருள்மிகு அகஸ்தியர் ஆஸ்ரம்
ராஜா தெரு, தி.நகர், சென்னை - 17.

**98வது பாராயணம் - 21.06.2024 வெள்ளிக்கிழமை**
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ வித்யா ராஜராஜேஸ்வரி திருக்கோயில்
நேரு காலனி 2வது தெரு, நங்கநல்லூர், சென்னை.

**99வது பாராயணம் - 28.06.2024 வெள்ளிக்கிழமை**
ஸ்ரீ ஐயப்பன் திருக்கோவில்
மடிப்பாக்கம், சென்னை - 91.

---

தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் மண்டலி சார்பாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் செய்திட அனுக வேண்டிய எண்.

**9443495950, 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** - மஹாகவி பாரதி

## அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

### வேதமந்திரம் - 59

**ஓம் ஆநோ ப[4]த்[3]ரா: க்[1]ரத[1]வோ யந்து[1]**
**விஸ்வதோ[1] த[3]ப்[3]தா[4]ஸோ அப[1]ரீதா[1]ஸ உத்[3]பி[4]த[3] |**
**தே[3]வா நோ யதா[2] ஸத[3]மித்[3] ப்ருதே[4]**
**அஸந்நப்[1]ராயுவோ ரக்ஷிதா[1]ரோ தி[3]வே தி[3]வே ||**
**- ரிக் வேதம், ஆநோ ப[4]த்[3]ரா ஸூக்தம்.**

**பொருள் :** *அறியாமை, ஐயம், திரிபு ஆகியவற்றை நீக்கவல்ல நல்லெண்ணங்கள் நாலாபக்கங்களில் இருந்தும் நம்மை நோக்கி வரட்டும்.*
*முறையான வாழ்வைப் பின்பற்றுபவர்களை விட்டு நீங்காத தேவர்கள் நம் அனைவருக்கும் இடைவிடாத இன்பத்தைப் பெருகச் செய்து நம்மைப் பாதுகாப்பவர்களாக விளங்கட்டும்.*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||*

# வேதபாரதி செய்திகள்

**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 8 இதழ்: 10

*அச்சிட்டு வெளியிடுபவர்*
*பதிப்பாளர், ஆசிரியர்*

**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 70101 88571

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
*39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,*
*சென்னை - 600 010.*

REGD No : TN/CC(S) / DN / 571 / 24-26

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**

(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/24-26 /

Valid from 01.01.2024 to 31.12.2026

புத்தக வடிவமைப்பு :

**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| உங்கள் சிந்தனைக்கு | 5 |
| அட்டைப்பட விளக்கம் | 7 |
| ஆடி மாத விசேஷங்கள் | 10 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 11 |
| ஸ்ரீமத் பாகவதம் | 13 |
| ஆதிசங்கரர் | 16 |
| அறுபத்தி மூன்று நாயன்மார்கள் | 19 |
| மூதுரை (ஔவையார்) | 22 |
| ஏன்? எதற்கு? தெரிந்துகொள்வோம் | 23 |
| மஹிமையான பொருட்கள் | 25 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 31 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 32 |
| தர்மத்தின் குரல் | 33 |
| பூக்களோடு பேசுவோம் | 35 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 38 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 42 |
| சென்னை திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோயில் | 44 |
| தருவின் நிழலில் | 46 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740**
**IFSC : CIUB 0000262**

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**D. சூரியநாராயணன்**
**R. வெங்கட்ராமன்**
**K. சங்கர், S. ரகுநாத்**
**Cell : 94451 02193, 98402 01625**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

## உங்கள் சிந்தனைக்கு....

## 10. பரமானந்த நிலை

நம் ரிஷிகள் எல்லாம் சத்தியத்தை தரிசித்தவர்கள். நாமும் சத்தியத்தை மனதில் நிறுத்த வேண்டுமானால் நாம் முதலில் சாந்தமாக ஆகவேண்டும். காலையில் எழுந்தது முதல் நாம் பல கர்மங்களை (அ) வேலைகளைச் செய்கிறோம். அதில் நம்முடைய சரீரத்தில் சலனங்கள் ஏற்படுகின்றன. சரீரத்தின் சலனம் ஒரு சத்தியம். இதை சற்று சூட்சமமாக பார்த்தால் இந்த நம் சரீரத்தின் சலனம் எங்கிருந்து ஆரம்பிக்கிறது? நம் சரீரத்தின் உள்ளே சில சலனங்கள் அதாவது மூச்சு இழுத்துவிடுவது, ரத்தம் சுத்திகரிப்பது, மல மூத்திரம் வெளியேறுவது போன்றவை தானாகவே நடைபெறுகின்றன. ஆனால் இந்த எல்லா சலனங்களுக்கும் மனதில் சலனம் ஏற்பட வேண்டும். ஆனால் சரீரத்தின் சலனமும், மனதின் சலனமும் **"சத்தியம்"**.

மனதில் சலனம் நின்றுவிட்டால் நம் சரீரத்தின் சலனமும் நின்றுவிடும். ஆனால் மனதிற்கு சலனம் இல்லாத ஒரு அவஸ்தை இருக்கிறது. அது நாம் தூங்கும் போது நம் மனதில் சலனம் கிடையாது. அதனால்தான் நாம் தூங்கும்போது எந்தவித அசைவும் இல்லாமல் தூங்குகிறோம். பிறந்த குழந்தைகள் சரீரத்தில் எந்தவித சலனமும் இல்லாமல் படுத்திருக்கும். காரணம் அக்குழந்தையின் மனதில் சலனத்தைக் கொடுக்கும் சிந்தைகள் இல்லை. அந்த குழந்தை உணர்ந்திருந்தும் அது சலனம் இல்லாமல் இருப்பதற்கு காரணம் அதன் மனதில் சிந்தனை எதுவும் இல்லை. இதுவும் ஒரு சத்தியம்.

இதுபோல் நாம் நினைத்தால் நம்முடைய

மனதையும் சிறிது நேரம் எந்தவித சிந்தனையும் இல்லாமல் வைத்திருக்க முடியும். இந்தவித அவஸ்தையைத்தான் **"மௌனம்"** என்பார்கள். பேசாமல் இருப்பதல்ல **"மௌனம்".** சிந்திக்க மனதை அனுமதிக்காத அவஸ்தைதான் **"மௌனம்".** இதுதான் மனதின் **"சாந்த பாவம்".** இந்த சாந்த பாவத்தை நாம் வளர்த்துக்கொண்டால் நாம் சிந்தைகளிலிருந்து உயருவோம். இந்த ஒரு நிலைக்கு **"பரமானந்த நிலை"** என்று பெயர்.

ஸ்ரீமத் பாகவதம் 11ஆம் ஸ்கந்தத்தில் 9ஆவது அத்தியாயத்தில் 4ஆவது ஸ்லோகம் கூறுவது :

**த்வாவேவ சிந்தயா முக்தௌ பரமாநந்த ஆப்லுதௌ/**

**யோ விமுக்தோ ஜடோ பாலோ யோ குணேப்ய: பரம் கத://**

**பொருள் :** எவன் மான அவமானங்களை அறியாமலும் எந்தவித பிரயத்தனமும் இல்லாமலும் பாலகனாகவும் இருக்கின்றானோ அவனும், எவன் குணாதீதனான ஈஸ்வரனுடன் ஐக்யத்தை அடைகின்றானோ அவனும் ஆக இந்த இருவரும் கவலையற்றவர்களாக பரமானந்தத்தில் மூழ்கியவர்களாவார்கள்.

நாமும் தினமும் தியானம் செய்தால் **"பரமானந்த நிலை"** அடையலாம்.

**D. சூரியநாராயணன்**


**வேதபாரதி செய்திகள் புத்தக வங்கி கணக்கு எண்கள் விபரம்**

**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.200
10 வருட சந்தா ரூ.1500
வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740 | IFSC : CIUB0000262**

## அட்டைப்பட விளக்கம்
## குரு பூர்ணிமா (வியாஸ பூஜை)

ஒவ்வொரு வருடமும் ஆடி மாதத்தில் வரும் பௌர்ணமி அன்று சீடர்கள் தங்களுக்கு கல்வி, அறிவு புகட்டிய தங்களுடைய குருவை போற்றும் விதமாக அவர்களுக்கு குரு பூஜை செய்வார்கள்.

**"குரு"** என்றால் என்ன? உண்மையில் யார் **"குரு"?** **"குரு"** வின் தத்துவம் என்ன? **"குரு"**விற்கும் நமக்கும் உள்ள பந்தம் என்ன?

அந்த காலத்தில் நம்முடைய நாட்டில் எழுதுபொருட்கள் கிடையாது. ஆனால் ஒருவர் கூறுவதை மற்றவர் காதால் கேட்டு மனதில் நிறுத்தி அதை அனுபவித்து, பின் அதை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுப்பார்கள். அப்படிப்பட்ட பரம்பரைக்குத்தான் **"குரு சிஷ்ய பரம்பரை"** என்று பெயர். நம்முடைய நாடு குரு சிஷ்ய பரம்பரை உள்ள நாடு. **"குரு"** என்றால் அறிவை ஊட்டுபவர், தன்னுடைய அனுபவத்தைச் சொல்லிக் கொடுப்பவர் என்று பொருள்.

**"குரு" = "குரு"** என்பதில் இரண்டு எழுத்துக்கள் உள்ளன. **கு + ரு.** இதை சூக்ஷமமாக படிக்க வேண்டும். **"கு"** என்றால் **"அறியாமை", "இருட்டு"** என்று பொருள். குகையில் இருட்டு இருக்கும். **"கு"** என்று நாம் உச்சரிக்கும் போது நம்முடைய உதடுகள் குவிந்து நம்முடைய வாய் ஒரு குகைப்போல் காணப்படும். அதன் உள்ளே இருப்பது **"அந்தகாரம்"** இருட்டு. அடுத்து **"ரு" ர + உ = "ரு". "ர"** என்னும் எழுத்தை உச்சரிக்கும்போது நம்முடைய நுனி நாக்கு மேல் அண்ணத்தில் உரசுகிறது. இரண்டு கட்டைகள், அல்லது கற்கள் உரசும்போது அங்கு **"தீ"** வெளிச்சம்

உண்டாகிறது. அதாவது **"குரு"** என்பவர் நம் மனதில் இருக்கும் **"அக்ஞானம்"** என்னும் இருளை போக்கி, **"மெய்ஞானம்"** என்னும் வெளிச்சத்தை வழங்குபவர்.

ஆசிரமத்தில் இருக்கும் சன்னியாசிகள் இந்நாளில் தாங்கள் ஞானத்தை பெற்றதற்கு நன்றியை வெளிப்படுத்தும் வகையில் **வியாச பகவானை** ஆராதித்து பூஜை செய்வார்கள். ஆகையால் இதை **"வியாஸபூஜை" என்றும் "குரு பூர்ணிமா"** என்றும் அழைப்பார்கள். ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஸ்வரூபமான ஸ்ரீ வேதவ்யாஸர் துவாபர யுகம் முடிவிலும் கலியுகம் ஆரம்பம் ஆவதற்கு முன் அவதரித்தவர் என்று புராணங்கள் கூறுகின்றன.

ஒரே வடிவாக இருந்த வேதத்தை ரிக், யஜுர், சாம, அதர்வண வேதம் என்ற நான்காக பிரித்து உலகுக்கு ஈந்தவர். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அருளிய கீதையைத் தொகுத்தவர். ஸ்ரீ மஹாபாரதம், ஸ்ரீமத் பாகவதம் முதலிய பதினெட்டு புராணங்களை இயற்றியவர் எல்லா ஸன்யாசிகளுக்கும் இவர்தான் குரு.

ஆவணி அவிட்டத்தன்று (உபாகர்மா) ஸ்ரீவேத வியாஸரை கும்பத்தில் ஆவாஹனம் செய்து பூஜை செய்கிறோம்.

ஸந்யாஸிகள் சாதுர்மாஸ்ய ஆரம்பத்தில் ஸ்ரீவேத வியாஸ பூஜை செய்வார்கள்.

அப்படிப்பட்ட இந்த ஸ்ரீவேதவ்யாஸ மஹரிஷியை ஒவ்வொருவரும் **குரு பூர்ணிமா** தினத்தன்று பூஜை செய்ய வேண்டும். முடியாதவர்கள் கீழ்க்கண்ட ஸ்லோகங்களைச் சொல்லி நமஸ்கரிக்கலாம்.

**வ்யாஸம் வஸிஷ்டநப்தாரம் ஸக்தே: பௌத்ர மகல்மஷம்/**

**பராஸராத்மஜம் வந்தே ஸுகதாதம் தபோநிதம் //**

**பொருள் :** வசிஷ்டருடைய கொள்ளுப் பேரரும்,

சக்தியின் பேரரும், பராசரருடைய புத்திரரும், சுகருடைய தகப்பனாரும், மாசற்ற தபோதனருமாகிய வியாஸரை வணங்குகிறேன்.

**வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே/**

**நமோ வை ப்ரஹ்மநிதயே வாஸிஷ்டாய நமோ நம://**

**பொருள் :** விஷ்ணு வடிவுள்ள வியாஸராகவும், வியாஸர் வடிவங்கொண்ட விஷ்ணுவாகவும், வேதத்தின் பொக்கிஷமாகவுமுள்ள அவருக்கு நமஸ்காரம். வசிஷ்டர் குலத்துதித்த அவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

இந்த வருடம் **"குரு பூர்ணிமா"** 21.07.2024 (ஞாயிறு) அன்று வருகிறது. இன்று நாமும் நமக்கு அறிவுக் கண்ணைத் திறந்த நம் குருவை நமஸ்கரித்து ஆசி பெறுவோம்.

**D. சூரியநாராயணன்**

## மகான்களின் சாதுர்மாஸ்ய விரதம்

காஞ்சி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர
ஸரஸ்வதி மஹா ஸ்வாமிகள்.
போன் : 044 - 27222115
kanchimutt@gmail.com

சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த
மஹா ஸ்வாமிகள், சிருங்கேரி.
Sri Sharada Peetam, Sringeri,
Chikmagalur (Dt) Pin 577 139 | Ph : 08265 - 250123

நெரூர் ஜகத்குரு ஸ்ரீ வித்யா ஸங்கர
ஸரஸ்வதி ஸ்வாமிகள்
தொடர்பு : 94458 32884

## குரோதி வருஷம் - ஆடி மாத விசேஷங்கள்
### (ஜுலை 17.07.2024 முதல் ஆகஸ்ட் 16.08.2024 வரை)

| | | | |
|---|---|---|---|
| 17.07.2024 | ஆடி 1 | புதன் | அனுஷம், ஆடிப் பண்டிகை, ஏகாதசி |
| 18.07.2024 | ஆடி 2 | வியாழன் | சாதுர்மாஸ்ய விரதம் ஆரம்பம் |
| 19.07.2024 | ஆடி 3 | வெள்ளி | ப்ரதோஷம் |
| 21.07.2024 | ஆடி 5 | ஞாயிறு | காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி சுவாமிகள் ஜயந்தி |
| 24.07.2024 | ஆடி 8 | புதன் | சங்கடஹர சதுர்த்தி |
| 26.07.2024 | ஆடி 10 | வெள்ளி | ஷஷ்டி |
| 29.07.2024 | ஆடி 13 | திங்கள் | ஆடிக்கிருத்திகை |
| 31.07.2024 | ஆடி 15 | புதன் | ஏகாதசி |
| 01.08.2024 | ஆடி 16 | வியாழன் | ப்ரதோஷம் |
| 03.08.2024 | ஆடி 18 | சனி | ஆடி 18-ம் பெருக்கு |
| 04.08.2024 | ஆடி 19 | ஞாயிறு | ஆடி அமாவாஸை |
| 07.08.2024 | ஆடி 22 | புதன் | ஆடிப்பூரம் |
| 08.08.2024 | ஆடி 23 | வியாழன் | சதுர்த்தி |
| 10.08.2024 | ஆடி 25 | சனி | ஷஷ்டி |
| 14.08.2024 | ஆடி 29 | புதன் | அனுஷம் |
| 15.08.2024 | ஆடி 30 | வியாழன் | ஏகாதசி |
| 16.08.2024 | ஆடி 31 | வெள்ளி | ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம் |

### 04.08.2024 ஞாயிற்றுக்கிழமை - அமாவாஸை

குரோதி நாம ஸம்வத்ஸரே, தக்ஷிணாயணே க்ரீஷ்ம ருதௌ, கடக மாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர : வாஸரஸ்து பானு வாஸர யுக்தாயாம் புஷ்ய நக்ஷத்ர யுக்தாயாம் விஸ்ணு யோக விஸ்ணு கரண ஏவம் குண விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிளெ.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 62

## அத்தியாயம் – 3

## கர்ம யோகம்

**ஏவம் ப்ரவர்திதம் சக்ரம் நாநுவர்தயதீஹ ய/**
**அகா4யுரிந்த்3ரியாராமோ மோக4ம் பார்த்த2 ஸ ஜீவதி//**
**(கீதை 3-16)**

**பொருள் :** ஓ பார்த்தா, இகத்தில் இங்ஙனம் இயக்கப்பெற்றுள்ள சக்கரத்தைப் பின்பற்றாதவன், பாப வாழ்க்கையுடையோனாய், புலன்களில் பொருந்தினவனாய், வீணே வாழ்கிறான்.

**விளக்கம் :** பகவான் அர்ஜுனனை "ஓ பார்த்தா" என்று அழைக்கிறார். நாம் பலவித கர்மங்களை செய்கிறோம். நாம் செய்யும் வினையின் பலன் மற்றவர்களுக்கும் போகவேண்டும். அப்படி போகவேண்டும் என்றால் அவர்களும் ஏதோ ஒரு காரியம் செய்திருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தனக்கென்று செயலாற்றாமல் இருந்தால் இந்த செயலின் பலன் நிறைய பேருக்கு கிடைக்கும்.

நாம் செய்த கர்மத்தின் பலன் நமக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்று நினைத்தால் அது ஒரு பாவகரமான செயல் என்று பகவான் கூறுகிறார்.

எல்லோருக்கும் நல்லது கிடைக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் நினைத்து செயலாற்றினால், செயலும் பலனும் மாறி மாறி எல்லோருக்கும் கிடைக்கும். அப்படி இல்லாமல் எனக்கு எனக்கு என்று நினைத்து செயலாற்றினால் அது பெரிய பாவமாகும்.


ஒரு மாணவன் பள்ளிக்கூடம்போய் படிக்காவிட்டால் அவன் பள்ளிக்குப் போயும் போகாதவன் ஆகிறான். ஒருவன் ஒரு ஊருக்குப்போய் போன காரியத்தை கவனிக்காவிட்டால் அவன் அந்த ஊருக்குப்போயும் போகாதவனாகிறான்.

இதுபோல் இந்த உலகில் மனித பிறவி எடுத்துள்ள நாம் இந்திரிய போகத்தில் உழல்வதற்கல்ல. ஜகத் பிரவிருத்தி சக்கரத்தில் கலந்து கொண்டு யாகங்கள் செய்து, இயற்கை நடைமுறையை இனிதாக்கி வாழ்க்கையை பண்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த பெரு நோக்கத்தைப் புறக்கணித்துவிட்டுச் சிற்றின்ப வாழ்க்கையில் புகுபவர்கள் பிறந்தும் பிறக்காதவர் ஆகின்றனர். உண்மையில் அவர்களின் வாழ்க்கை வீணானது.

முறையாகக் கர்மம் செய்தே ஆக வேண்டும் என்னும் விதிக்கு விலக்கானவர் யாரும் இல்லையா? என்ற கேள்விக்கு விடை, வரும் ஸ்லோகங்களில் காண்போம்.


தொடரும்..

99940 89133



99940 89140

SRI SASTHA CATERING



We are Supplying Meals,
Tiffin & Marriage Sear
Variation in Order



28, Senthuran Colony, 2nd Street, Muvarasempet, Madipakkam, Chennai - 91

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி பகுதி - 41

## ஸ்கந்தம் 4
## அத்தியாயம் 13 முதல்
## (த்ருவ மஹாராஜாவின் சந்ததி விவரணம்)

ஸ்ரீமத் பாகவதம் பேசாத விஷயமே இல்லை. அது ஸத்சங்கம், நாம கீர்த்தனம், கதா ச்ரவணம் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. இது மட்டுமல்லாமல் தர்மம், பூலோக வர்ணனை, பதினான்கு லோகங்களின் வர்ணனை, ஸ்வர்க நரக வர்ணனை, நதிகளின் மேன்மை, வாழ்வியல் நெறி, மொழிப்புலமை, சமயோசித புத்தி, மனோ தத்துவம், சாங்க்ய யோகம் முதலியவற்றையும் விளக்குகிறது. இவை தவிர ஏராளமான ஸ்துதிகளும் ஸ்ரீமத் பாகவதத்தில் உண்டு.

**"த்ருவன்"** தான் விரும்பியது போல் உத்தம பதத்தை அடைந்தான். அவன் எட்டாத உயரத்திலே பிரகாசமாக இருந்தபடி மூன்று லோகங்களிலும் உள்ளவர்களுக்கு ஒளிச் சுடராக விளங்குகிறான்.

த்ருவனுக்கு பிறகு அவனுடைய மூத்த புதல்வனான **"உத்கலன்"** தான் அரசாள வேண்டும். ஆனால் அவன் தந்தையின் சிம்மாசனத்தை விரும்பவில்லை. அவன் பிறவி முதலே மனவடக்கமுள்ளவனாகவும், எதிலும் பற்று இல்லாதவனாகவும், அனைத்து ஜீவராசிகளைத் தன்னுள்ளும், தன்னை அனைத்து ஜீவராசிகளிடமும் கண்டான். அதனால் அவன் ஒரு பைத்தியம்போல் நடமாடினான்.

நாட்டிற்கு ஒரு அரசன் இல்லாமல் இருக்கமுடியாது. ஆதலால் அரசபையில் எல்லோரும்

கலந்து ஆலோசித்து த்ருவனின் இளைய குமாரன் **“வத்ஸரன்”** என்பவனை அரசனாக்கினார்கள்.

வத்ஸரனின் வம்சத்தில் வந்த ராஜா **“அங்கன்”.** அங்கனுக்கு குழந்தை பாக்கியம் இல்லாததால் அவன் ஒரு யாகம் நடத்தினான். அதன் பலனாக அவனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அவன் பெயர் **“வேனன்”, “வேனன்”** என்றால் **“பயங்கரம்”** என்று பொருள். அந்த பெயருக்கு பொருந்துவது போல் அவனுடைய செயல்களால் அரசருக்கு கெட்டபெயர் ஏற்பட்டது. அவனுடைய கொடுமைகளை தாங்கிக்கொள்ள முடியாத அரசன் **“அங்கன்”** யாருக்கும் தெரியாமல் காட்டிற்குப் போய்விட்டான்.

இதுகாறும் தன்னிச்சையாகத் திரிந்து கொண்டிருந்த “வேனன்” ராஜ்யத்தை ஏற்றான். ஆனால் அவனுடைய கொடுங்கோன்மை அதிகரித்தது. நாட்டில் உள்ள முனிவர்களும் பெரியவர்களும் எவ்வளவோ புத்திமதி கூறியும் “வேனன்” திருந்தவில்லை. எல்லோரையும் ஏளனமாக பாவித்தான். அவனுடைய கொடுமையை தாங்க முடியாத அந்தணர்கள் கட்டுப்படுத்த முடியாத கோபத்திற்கு ஆளாகி “தர்மத்துக்கு விரோதமாக நடந்துகொள்ளும் அரசனால் நாட்டுக்கு நன்மை இல்லையென்பதால் அவன் இறந்து போகட்டும்” என்று சாபம் கொடுத்தனர். அந்த சாபம் அந்த க்ஷணமே வேனனை பீடித்தது. அதனால் “வேனன்” பிணமாய் விழுந்தான். தன் மகனின் துரதிருஷ்ட மரணத்தைக் கண்டு பெரிதும் துக்கமடைந்த வேனனின் தாய் தன் மகனின் உடலை தகனம் செய்துவிடாது பத்திரப்படுத்தி காப்பாற்றி வந்தாள்.

அரசன் இல்லாததால் நாட்டில் அராஜகம்

மேலோங்கியது. துஷ்டர்கள் பெருகினர். சாதுக்களும், பெண்களும், குழந்தைகளும் ஹிம்சிக்கப்பட்டனர். திருடும் கொலையும் கொள்ளையும் அதிகரித்தது.

நாட்டில் இருந்த மஹரிஷிகள் அரசன் இல்லாமல் நாட்டில் நிலவிவரும் அராஜகத்தைக் கண்டு வேதனைப்பட்டனர். அரசன் இல்லாமல் இருப்பது சாஸ்த்திரத்திற்கு விரோதம் என்பதை உணர்ந்தார்கள். அதே சமயம் அங்கனுடைய வம்சம் வேனனுடைய மரணத்தோடு முடிந்துபோய் விடுவதையும் அவர்கள் விரும்பவில்லை. இந்த காலத்தில் உள்ள **CLONING** முறைபோல் அந்த காலத்து ரிஷிகள் பல வித்தைகளைக் கற்றிருந்தார்கள். ரிஷிகள் வேனனின் உடலைக் கடைந்தார்கள். அப்போது உடலிலிருந்து தெய்வீக அழகு பொருந்திய ஒரு புருஷனும் ஒரு ஸ்திரீயும் தோன்றினார்கள். அவர்களைப் பார்த்த ரிஷிகள் இந்த ஆண்மகன் பகவான் விஷ்ணுவின் அம்சம். இவன் பெயர் "ப்ருது". இவன் உலகைக் காக்க பிறந்தவன். இவளோ திருமகளின் அவதாரம். இவள் பெயர் "அர்ச்சிஸ்". இவளை ப்ருது மணப்பான் என்றார்கள்.

அனைவரும் அவர்களது அவதாரத்தைக் கொண்டாடி பூமாரி பொழிந்தார்கள். ப்ருதுவிற்கு முனிவர்கள் பட்டாபிஷேகம் செய்வித்தார்கள்.

**"ப்ருது"** மஹாராஜன் தன் தேவியோடு பட்டாபிஷேகம் செய்துகொண்டு இன்னொரு அக்கினியோ என்னும்படி ஒளிர்ந்தார்.

ஸ்ரீமத் பாகவதம் தொடரும்...

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன்** **அத்தியாயம் – 13** **பகுதி 32**

## திவ்ய சந்திப்பு
## (ஸ்ரீ சங்கரர் – மண்டனமிச்ரர் வாத ஸபை)

அடுத்த நாள் சபையில் ஸ்ரீ சங்கரரும் மண்டனமிச்ரரும் எதிர் எதிராக தர்பாஸனத்தில் அமர்ந்திருந்தார்கள். ஸ்ரீசங்கரரின் இருபுறமும் சித்ஸுகரும், பத்மபாதரும் அமர்ந்திருந்தனர். வாதத்திற்கு மண்டனமிச்ரரின் மனைவி **"ஸரஸவாணி"** நடுவராக இருக்க இசைவு தந்து ஒரு தூணின் மறைவில் அமர்ந்திருந்தாள். வாதஸபை ஆரம்பமாயிற்று.

வாதத்தில் மண்டனமிச்ரர் தோற்றுவிட்டால் அவர் ஸ்ரீசங்கரரின் அத்வைதக் கொள்கையை ஏற்று துறவு பூண்டு ஸ்ரீசங்கரரின் சீடராக மாற வேண்டும். ஒரு சமயம் ஸ்ரீ சங்கரர் தோற்றுவிட்டால் அவர் பூர்வமீமாம்சத்தை ஏற்று இல்லறத்தவராக மாறிவிட வேண்டும். இதற்கு இருவரும் சம்மதம் தெரிவித்தார்கள்.

முதலில் மண்டனமிச்ரர் வாதிடும்போது "வேதம் கர்மாவுக்கே முக்கியத்துவம் அளிப்பதென்றும், கர்ம சோதகங்கள் (கர்மாவை செய்யச் சொல்லி தூண்டுபவைகள்) அல்லாத வாக்கியங்கள் எல்லாமே அர்த்தவாதங்கள் மட்டுமே" என்று வாதத்தை ஆரம்பித்தார்.

இந்த வாதத்திற்கு பதில் அளித்த ஸ்ரீசங்கரர் "வேதத்தின் லக்ஷ்யம் ஞானமே, மஹாவாக்கிய விசாரத்தால் மட்டுமே ஞானம் உண்டாகும் மற்றும் நைஷ்கர்ம்யரூபமே ஞானம்" என்று கூறினார்.

*இப்படியாக இருவருக்குமான வாதம் 18 நாட்கள் நடந்தது.*

*மண்டனமிச்ரர் எழுப்பிய எல்லா சந்தேகங்களுக்கும் ஸ்ரீ சங்கரர் அழகாக விளக்கம் அளித்தார். ஸ்ரீசங்கரரின் அறிவாற்றலையும், சாஸ்திர ஞானத்தையும், ஆத்ம ஞானத்தையும் கண்டு வியந்த மண்டனமிச்ரர் எழுந்து நின்று ஸ்ரீசங்கரரை சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்.*

*ஸ்ரீசங்கரர் அவரை சிஷ்யராக ஏற்றுக்கொண்டு அவருக்கு சன்யாச ஆஸ்ரமத்தைக் கொடுத்து* **“ஸுரேஷ்வராச்சார்யர்” (ஸ்ரீ சுரேஷ்வரர்)** *என்ற பெயரையும் கொடுத்தார். (சுரேஷ்வரர் என்றால் தேவர்களுக்கெல்லாம் ஈஸ்வரன் என்று பொருள். ஸ்ரீசங்கரருடைய முக்கிய நான்கு சிஷ்யர்களில் இவரும் ஒருவர்)*

*சில சங்கர விஜயங்களில் கீழ்கண்ட சம்பவங்கள் நிகழ்ந்ததாக விவரிக்கப்பட்டுள்ளன.*

*ஸ்ரீ சங்கரரும் மண்டனமிச்ரரும் நடத்திய வாதம் முடிவடைந்தது. ஸ்ரீசங்கரரின் ஆற்றலை அறிந்த மண்டனமிச்ரர் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு ஸ்ரீசங்கரரின் சீடராக தயாராகிவிட்டார். ஆனால் விவாதத்திற்கு நடுவராக இருந்த ஸரஸவாணிதான் தீர்ப்பளிக்க வேண்டும். தன் கணவர் மண்டனமிச்ரர் தோல்வியை ஒப்புக்கொண்டு ஸந்நியாஸம் ஏற்றுக்கொண்டால் கணவரைப் பிரிந்து தன்னால் வாழமுடியாது என்று எண்ணிய அவள் ஸ்ரீசங்கரரிடம் தான் தன் கணவனில் பாதியாக இருப்பதால் தன்னையும் வாதத்தில் வெற்றி கொண்டால் மட்டுமே தாங்கள் வெற்றி பெற்றதாக கூறமுடியும் என்றாள். அதற்கு ஸ்ரீ சங்கரரும் சம்மதம் தெரிவித்தார்.*

*ஸரஸவாணி எப்படியாவது ஶ்ரீசங்கரரை வென்றுவிட வேண்டும் என்று நினைத்தாள். ஶ்ரீ சங்கரர் எட்டு வயதிலேயே துறவு மேற்கொண்டதால் அவருக்கு காமக் கலையில் நுட்பமான அறிவும் அனுபவமும் இருக்காது என்று நினைத்து ஆண் – பெண் உறவு சம்பந்தமான விஷயங்களைக் கேட்டாள். அதைக் கேட்டதும் ஶ்ரீ சங்கரர் சற்று திகைத்தார். சர்வக்ஞனான ஶ்ரீ சங்கரருக்கு காம சாஸ்திரம் தெரியாமல் இருக்குமா? இருப்பினும் ஶ்ரீ சங்கரர் தனக்கு ஒரு மாதகாலம் அவகாசம் வேண்டும் என்று கூறினார். ஸரஸவாணியும் ஒரு மாதகாலம் அவகாசம் அளித்தாள்.*

*ஶ்ரீ சங்கரர் தன் சிஷ்யர்களுடன் அந்த இடத்திலிருந்து கிளம்பினார்.*

தொடரும்..


# வேதபாரதி
## பெண்மையைப் போற்றுவோம்

நாள் :

**14.07.2024, ஞாயிற்றுக்கிழமை**

இடம் :

**ஶ்ரீமதி ஜானகி அம்மாள் ஆடிடோரியம்,**

APL குளோபல் வளாகம், துரைப்பாக்கம்.

நேரம் : **காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை**

*13 வயதிற்கு மேல் உள்ள பெண் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுடன் கலந்து கொள்ளலாம்.*

தொடர்புக்கு: **70101 88571**

## அறுபத்தி மூன்று (63) நாயன்மார்கள்

*அருணன்* *18/63*

### 18. திருநாவுக்கரசு நாயனார் (சித்திரை – சதயம்)

அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் இந்த நால்வரையும் திருத்தொண்டர்கள் என்று அழைப்பார்கள்.

இவர்களில் தொண்டு வழியைக்காட்டியவர் **"அப்பர்" ஸ்வாமிகள்.** குழந்தையாக இருந்து இறைவனை அடையும் வழியைக் காட்டியவர் **"சம்பந்தர்".** தோழனாக இருந்து தோழமை வழியைக் காட்டியவர் **"சுந்தரர்".** அடிமையாக இருந்து இறைவனை அடையும் "தாமஸ மார்க்கத்தைக் காட்டியவர் **"மாணிக்கவாசகர்".**

6-ஆம் நூற்றாண்டில் கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி ஒன்றியத்தில் அமைந்துள்ள சிற்றூரான **"திருவாமூர்"** என்ற ஊரில் இருந்த **"களரிவாகை"** என்ற மரத்தடியில் இருந்த ஒரு குடிசையில் ஒரு தெய்வீக குழந்தை தோன்றியது. இவருடைய தந்தையின் பெயர் **"புகழனார்".** தாயார் பெயர் **"மாதினியார்".** அந்த குழந்தைக்கு அவருடைய தந்தையார் **"மருள் நீக்கியார்"** என்று பெயர் சூட்டினார். மருள்நீக்கியார் சகோதரியின் பெயர் **"திலகவதியார்".**

இளமையிலேயே மருள் நீக்கியாரின் பெற்றோர் இறந்துவிட்டனர். ஆகையால் அவர் தன் சகோதரி **"திலகவதியார்"** பாதுகாப்பில் வளர்ந்துவந்தார். கல்வியிலும் அறிவிலும் சிறந்து விளங்கினார் மருள் நீக்கியார். இந்த காலத்தில் ஆண்ட அரசன் **"ஜைன"** மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தான். மருள்நீக்கியாரும் சமண மதத்தில் பற்றுகொண்டவராக இருந்தார். சகோதரி திலகவதியாரோ சிவபக்தி மிக்கவர். அவர்

*தனது தம்பியை தம் தாய் சமயமான சைவ சமயத்திற்கு மீட்டுத் தரவேண்டும் என்று சிவபெருமானிடம் வேண்டினார்.*

*சிவபெருமானுடைய திருவிளையாடலால் மருள்நீக்கியாரை சூலை நோய் பற்றியது. தீராத வயிற்றுவலியால் அல்லலுற்ற மருள்நீக்கியார் தன் சகோதரியின் அறிவுரையால் சிவப்பரம் பொருளின் மகத்துவம் உணர்ந்து* **"திருவதிகை"** *சென்று* **"வீரட்டானேஸ்வரர்"** *சந்நிதியில் நின்று கீழ்க்கண்ட திருப்பதிகம் பாடினார்.*

**"கூற்றாயினவாறு விலக்ககிளீர் கொடுமை பல செய்தன நான் அறியேன்**
**ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்**
**தோற்றாது என் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட**
**ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மனே"**

*பாடியவுடன் மருள்நீக்கியாரின் சூலை நோய் நீங்கியது. பாடலால் மகிழ்ந்த சிவனார் அசரீரியாக வாய் மணக்க பதிகம் பாடியதால் "இன்று முதல் நீர்* **"திருநாவுக்கரசர்"** *ஆவீர் என அருள் புரிந்தார். அன்றிலிருந்து ஈசனுக்கு உழவாரப்பணிகள் செய்து தொண்டாற்றி வந்தார்* **"திருநாவுக்கரசர்".**

*சமணர்கள் அரசனைத் தூண்டி திருநாவுக்கரசரை கொல்வதற்காக கல்லுடன் கட்டி கடலில் எறிந்தார்கள். ஆனால் நாவுக்கரசரோ சிறிதும் அஞ்சாமல் சிவனையே நினைத்து* **"சொற்றுணை வேதியன் சோதி வானவன்...** *எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடிக் கரையேறினார்.*


*ஒரு முறை சீர்காழிக்குச் சென்ற* **"திருநாவுக்கரசர்",** *திருஞானசம்பந்த ஸ்வாமிகளைச் சந்தித்து அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். சம்பந்தர் அவரை எதிர் வணங்கி* **"அப்பரே!"** *என்று இரு கைகளையும் பற்றி எடுத்தார். அந்த நாள் முதல் திருநாவுக்கரசர்* **"அப்பர்"** *என்னும் திருப்பெயராலும் அழைக்கப்பெற்றார்.*

**"திருநாவுக்கரசர்"** *ஸ்வாமிகள் ஏராளமான*

*சிவாலயங்களுக்கு நடந்தே சென்று உழவாரப்பணி செய்தும், தேவார பதிகங்கள் பாடியும் சிவபெருமானை வழிபட்டார். இவர் 49,000 தேவாரப் பதிகங்களைப் பாடியுள்ளார். சைவ சமயத்திற்கு சிறப்பு சேர்ந்த* **“திருநாவுக்கரசு ஸ்வாமிகள் “திருப்புகலூர்”** *என்னும் சிவ ஸ்தலம் சென்று உழவாரப் பணி செய்யும் போது இறைவன் பொன்னும் மணியும் அவர்முன் தோன்றச் செய்தான். அப்பரோ தமக்கு அவற்றால் என்ன பயன்? என்று எண்ணி அவற்றை நீரில் எறிந்தார்.*

**“திருநாவுக்கரசர்”** *ஸ்வாமிகளின் 81-ஆவது வயதில் ஓர் சித்திரை மாதத்து சதய நன்னாளில் இறைவன் சிவானந்த ஞான வடிவளித்துத் தம் சேவடிக்கீழ் அவரை ஆட்கொண்டருளினார்.*

*திருநாவுக்கரசருடைய காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பார்கள்.*



*நாயன்மார்கள் கதை தொடரும்......*

# ஔவையார்
# “மூதுரை”

*“**மூதுரை**” = முதுமை + உரை = மூதுரை பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால் “**மூதுரை**” என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பா பாடல்கள் அமைந்துள்ளன.*

## வெண்பா 22

**எழுதியவாறேதான் இரங்கும் மட நெஞ்சே!**
**கருதியவாறு ஆமோ கருமம்? – கருதிப் போய்க்**
**கற்பகத்தைச் சேர்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்**
**முற்பவத்தில் செய்த வினை.**

**பொருள் :** *மட நெஞ்சே! திட்டத்தோடு கற்பக மரத்திடம் சென்றாலும், எட்டிக்காயே கிடைத்ததென்றால் அது நம் முன் வினைப்பயனே. விதியில் எழுதியுள்ளபடிதான் நமக்குக் கிடைக்குமே அல்லாது நாம் நினைப்பதெல்லாமா நடந்துவிடும்?*

**விளக்கம் :** *கற்பக விருக்ஷம் (மரம்) நாம் நினைத்ததைத் தரக்கூடியது. ஒருவன் தனக்கு நல்லது கிடைக்கும் என்று நினைத்து அந்த மரத்தை நாடிச் சென்றான். ஆனால் அந்த மரம் அவனுக்கு காஞ்சிரங்காயை (அதாவது கடுக்காயை, எட்டிக்காயை) கொடுத்ததாம். அப்படி என்றால் அது அவனுடைய விதி என்றுதான் சொல்ல வேண்டும். அதுபோல் நம்முடைய முந்தைய வினை (ஊழ்வினை) தீயவையாக இருக்குமேயானால் இந்தப் பிறவியிலே நாம் செய்யக்கூடிய எல்லா காரியங்களிலும் முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது.*

தொகுப்பு : **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*

**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,**

வேளச்சேரி

# ஏன்? எதற்கு? தெரிந்துகொள்வோம்

## 6. காகத்திற்கு அன்னம் இடும் வழக்கம் எப்படி வந்தது?



*சிலர் தினமும் தாங்கள் சாப்பிட ஆரம்பிப்பதற்கு முன் காகத்திற்கு அன்னம் வைப்பார்கள். சிலர் தங்கள் முன்னோருக்கு சிரார்த்தம் செய்யும் நாட்களிலும் அமாவாசை அன்றும் காகத்திற்கு அன்னம் வைப்பார்கள்.*

*இந்த வழக்கம் எப்படி வந்தது?*

*இதற்கான காரணத்தை* **"உத்தர ராமாயணம்"** *சொல்கிறது.*

**"மருத்தன்"** *என்றமன்னன்,* **"மகேஸ்வர பூஜை"** *செய்து சிவனை வழிபட்டு அன்னதானம் செய்தான். இதில் இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் மற்றும் எமதர்ம ராஜனும் பங்கேற்றார்கள். அந்த நேரத்தில் இலங்கை மன்னர் ராவணன் அங்கே வந்தான். அவனால் தங்களுக்கு துன்பம் வரும் என நினைத்த தேவர்கள் பறவைகளாக மாறி பறந்தனர்.* **"எமன்"** *மட்டும் காகமாக மாறினான். இந்த நன்றிக்காக அவன் காகங்கள் மீது அன்பு செலுத்தினான். அதன்பிறகு மனித உயிர்களை பறித்த பிறகு, அவர்களது ஆத்ம சாந்திக்காக அவர்களது உறவினர்கள் இடும் சிரார்த்த அன்னம், இனி*

காகங்களுக்கே கிடைக்கும் என்றவிதியை உருவாக்கினான். அன்று முதல் காகங்களுக்கு அன்னமிடும் வழக்கம் வந்தது.

சிரார்த்ததின்போது ஒரு மந்திரம் வரும், **"உச்சிஷ்ட பிண்டம் வாயஸேப்யோ தத்யாத்"** அதாவது சிரார்த்தம் முடித்த பிறகு அன்னத்தைக் காகத்துக்கு வைக்க வேண்டும்.

உலகிலேயே காகம் ஒன்றுதான் தனக்குக் கிடைத்த உணவை தான் மட்டும் உண்ணாமல் தன் சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணும். இதைத்தான் வள்ளுவர் அழகாக கூறுகிறார்.

"காக்கை கரவா கரைந்துண்ணும்.... (குறள் 527) : காகம் தனக்குக் கிடைத்த உணவை மறைத்து வைக்காமல் சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணும்.

இப்படி பல உயர்ந்த குணங்களைக் கொண்ட காக்கைக்கு அன்னமிடுவது மிகவும் சிறப்பு.

காகத்தைப்போலவே நாமும் பகிர்ந்துண்டு வாழ்வோம்..

**-பகலவன்**

## வேதபாரதி சமஷ்டி உபநயனம் - 2024

நாள் : 07.07.2024, ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ சங்கரவித்யாலயா, ஊரப்பாக்கம்

அந்தண சிறுவர்களுக்கு சமஷ்டி உபநயன ஸ்ரீ சங்கரவித்யாலா, ஊரப்பாக்கத்தில் 8 குழந்தைகளுக்கு ப்ரம்மோபதேசம் நடக்க உள்ளது. அனைவரும் கலந்து கொண்டு குழந்தைகளை ஆசீர்வதிக்க வேண்டுகிறோம்.

**தொடர்புக்கு : 70101 88571**

# மஹிமையான பொருட்கள்

## 4. வலம்புரிச் சங்கு



**"சங்கு"** என்பது கடல் நத்தைகளின் ஓடுகளுக்கு உள்ள பெயராகும். சங்குகளில் பல வகைகளில் உண்டு. அவற்றில் முக்கியமாக இரண்டு வகை வலது பக்கம் திறந்திருக்கும் சங்கை **"வலம்புரி சங்கு"** என்றும், இடது பக்கம் திறந்திருக்கும் சங்கை **"இடம்புரி சங்கு"** என்று கூறுவார்கள்.

**"வலம்புரி சங்கு"** மிகவும் அரிதாகக் கிடைக்கக்கூடியதாகும். இந்து நம்பிக்கைகளில் இது மிக புனிதமான சங்காகவும், வளத்தையும், நலத்தையும் தருவதாக கருதப்படுகிறது.

தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது பதினாறு வகையான தெய்வீகப் பொருட்கள் வெளிவந்தன. அவற்றுள் ஒன்றான வலம்புரி சங்கை பகவான் ஸ்ரீமஹாவிஷ்ணு தன் இடது கையில் ஏற்றுக் கொண்டார்.

ஒரு கோடி சங்குகள் கிடைத்தால் அதில் ஒரே ஒரு வலம்புரி சங்கு கிடைக்குமாம். வலம்புரி சங்குகள் கடற்கரைக்கு வந்து முத்துக்களைக் கொட்டிவிட்டுச் செல்லுமாம். அது தானே முழங்கும் என்றநம்பிக்கையும் இருந்தது.

வலம்புரி சங்கிலிருந்து விலை உயர்ந்த முத்துக்கள் கிடைக்கும் என்றநம்பிக்கை சங்ககாலத்திலிருந்தே உள்ளது. அதற்கு உதாரணம் சிலப்பதிகாரத்தில் = **"வலம்புரியீன்றநலம்புரி முத்தம்", "மாசறு பொன்னே வலம்புரி முத்தே"**

*தமக்கு வில்வித்தை கற்றுத்தந்த குரு “சாந்தீபனி” முனிவரின் மகனை மீட் கடலில் வாழ்ந்த* **“பாஞ்சஜன்யன்”** *என்றஅசுரனை ஸ்ரீகிருஷ்ணர் கொன்றார். சாகும் தருவாயில் ஸ்ரீ கிருஷ்ணரை பணிந்த அந்த அரக்கனின் வேண்டுகோளின்படி அவனது சாம்பலைத் திரட்டி சங்காக மாற்றி அவனது பெயரிலேயே அந்த சங்கிற்கு* **“பாஞ்சஜன்யம்”** *என்று பெயரிடப்பட்டது.*

*வலம்புரி சங்கை முறையாக பூஜித்தால் மஹாலக்ஷ்மி நம்மைத்தேடி வருவாள் என்று வேதவாக்கியம் கூறுகிறது. அதேபோல் பிரம்மஹத்தி தோஷமும் அகன்றுவிடும் என்பதை கீழ்க்கண்ட ஸ்லோகத்தின் மூலம் அறியலாம்.*

**சங்க மத்யே ஸ்திதம் தோயம் ப்ராமிதம் சங்கரோபரி**

**அங்க லக்ஷ்ணம் மனுஷ்யானாம் ப்ரம்மஹத்யாதிகம் தஹேத்.**

*வீடு கட்டுபவர்கள் கைப்பிடி அளவுள்ள வலம்புரி சங்கை நிலை வாசலில் வைத்து வாஸ்து விதிப்படி சங்கப் பதிப்பு முறைசெய்துவிட்டால், அந்த வீடு மூன்று தலைமுறைக்கு செல்வ செழிப்போடு குபேர சம்பத்துடன் விளங்கும் என்பது நம்பிக்கை.*

**-பகலவன்**

உ

## பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் ஆராதனை

*நாள் : 01.08.2024, வெள்ளிக்கிழமை*
*நேரம் : காலை 8.00 மணி முதல்*
*இடம் : ஸ்ரீ சங்கர குருகுலம்,*
*மந்தைவெளி, சென்னை*

*அனைவரும் வருக! வருக!!*

Flat 50% off Spectacles

✆ : +91 99401 80145

VISION TECH

✤ Spectacles ✤ Sunglasses

✤ Contact Lenses Service



Ground Floor, No.35, Sai Kirupa Apartment,
100 Ft. Road, Taramani, Chennai - 600 042.

THE QUEST ACADEMY
(An initiative by IIT-Madras Alumni)
Door No.4, 3rd Street, Balamurugan Nagar
Velachery, Chennai - 600 042

CBSE TUITION

Class IX & X - Maths & Science
Class XI & XII - Maths, Physics, Chemistry, Biology & Computer Science
Coaching for JEE / NEET(UG) / Olympiad

Classes taken by IITians
Individual attention
Affordable fees
Frequent practice tests



Admissions open for 2024-25

Contact : Dr. B. Janarthanan B.E., M.Tech.(IITM), Ph.D(IITM)
87545 57435 / 75985 25295

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்


வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.



- 800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.
- சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.
- உறவினர்கள் தங்க - குளிருட்டப்பட்ட அறைகள்.
- விசாலமான கார் பார்க்கிங்.
- வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.
- நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.
- 24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.

தொடர்புக்கு


**48625585 / 9840545585**


வேதஸ்ரேணி
Mini Function Hall (A/C)
Traditional Ambience with Modern Amenities
Ayush Homam | Upanayanam | Birthdays | Engagement |
Sangeeth | Mehendi | Wedding | Valakaapu | Seemandham |
Shastiapthapoorthi | Sathabhishekam | Corporate Events
Ac Hall & Dining | Lift | Power Back Up | Car Parking |
CCTV | Hall Capacity- 150 -200 | Guest Rooms-2
Vedashreni, No 215, 3rd Street, Ramnagar Vijayanagar, Velachery, Chennai-42
95002 67471 | 98414 46897
VEG FOOD ONLY


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Contact
9952972436 / 7824807801
WOPPER

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## தியானம் செய்யுங்கள்



அநேக நியமங்களோடு பெரிய யக்ஞம் செய்வது, விரதம் இருப்பது, பிரம்மாண்டமான கோயில் கோபுரங்களைப் பார்த்துப் பார்த்துக் கட்டுவது, குளம் வெட்டுவது, என்றிப்படியெல்லாம் முன்னே பல காரியங்களைச் செய்து வந்தார்களே, இவையெல்லாம் அந்தந்த லட்சியத்தோடு நின்று விடவில்லை. இவற்றின் முக்கியமான லட்சியம் சித்தத்தை ஒருமுகப்படுத்தி சுத்தமாக்கப் பழக்குவதேயாகும். இந்த ஸத்காரியங்களின் நடுவிலும் அநேக கஷ்டம், அநேக அவமானம் எல்லாம் வரத்தான் செய்யும். ஆனாலும் காரியத்தை முடித்தாக வேண்டும் என்பதால், அவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு மேலே மேலே எடுத்துக்கொண்ட வேலையில் போய்க் கொண்டேயிருப்பார்கள். இதுவே சித்த சுத்திக்கு நல்ல உபாயமாகும். அப்புறம் சுவாசபந்தம், தியானம் எல்லாம் வைத்துக் கொள்ளலாம்.

தொடரும்..

### நன்றி

வேதபாரதி செய்திகள் பத்திரிகைக்கு 150றக்கும் மேற்பட்ட சந்தாதாரர்களை வழங்கி பத்திரிக்கை நடத்திட உறுதுணையாக உள்ள ஜனக்கல்யாண், மாடம்பாக்கம், சென்னை நிர்வாகிகள் ராம் ராம் சுந்தரராமன், ஸ்ரீ சாய்ராம் ஆகியவர்களுக்கு வேதபாரதி புத்தகக்குழு சார்பாக எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## கர்ம யோகம் — 2




சென்றமாத தொடர்ச்சி....

அதைக் கண்டு மக்களும் ஆரவாரம் செய்து சந்தோஷப் பட்டார்கள். அவர்களுள் ஓர் ஆதரவாளனுக்கு தான் கொடுத்த மாலையே மீண்டும் தன் கையில் கிடைத்திருப்பதற்கு வாய்ப்புண்டு. தனக்களித்த மாலைகளை அவர் தம்மிடத்திலேயே வைத்துக் கொண்டிருப்பதில்லை என்பதை அறிந்துங்கூட, நீங்கள் அவருக்கு மாலையிடுவதை நிறுத்துவதில்லை. அவருக்கு மரியாதை செலுத்துவதால் நீங்கள் ஆனந்தமும் அடைகிறீர்கள். மேலும், நீங்கள் அளிக்கும் மாலைகளை வாங்கிக் கொண்டு அவர் என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவரிடம் நீங்கள் கூறுவதில்லை. இப்படியிருக்கையில், நான் சிரத்தையாக இறைவனுக்குப் பழங்களைப் படைத்து சந்தோஷப்படுவதைப் பார்த்து ஏன் நீ கஷ்டப்படுகிறாய்? தவிரவும், உன்னுடைய தலைவர் நீ கொடுத்த மாலையை உனக்குத் திருப்பித் தரலாம் என்றால், இறைவனுக்கு நான்படைத்த பழங்களை, தம்முடைய ஆசிகளோடு அவற்றை மீண்டும் அவர் எனக்குத் திருப்பித் தருவதற்கு அவருக்கு சுதந்திரம் இல்லையா? உண்மையில், ஒரு கர்மயோகியானவன் இறைவனுக்குத் தின்பண்டங்களை மட்டுமின்றி, தன்னுடைய எண்ணங்களையும் வாக்குகளையும் மற்றும் செயல்களையும் நைவேத்தியம் செய்கிறான்' என்று புன்முறுவலோடு கூறினான்.

முற்றும்.

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்



*3-8 வேதங்களில் விஞ்ஞான உண்மைகள் தொடர்ச்சி :*

அதர்வ வேதமும் புராணங்களும் உலகத்தில் ஏழு தீவுகள் உள்ளன என்று கூறுகின்றன. அவை யுரேஷியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா, க்ரீன்லாந்து, அண்டார்டிகா என்று நமக்கு இப்பொழுது தெரியும். 1911ம் ஆண்டுக்கு முன்பு, மக்களுக்குத் தெரிந்தது ஆறு தீவுகளே. அண்டார்டிகா 14-12-1911 அன்று நார்வேயைச் சேர்ந்த ரொல்டு அமண்ட்ஸன் என்கிற விமான ஓட்டியால் கண்டுபிடிக்கப்பட்டது. புராணங்கள் அதைச் சாகத்வீபம் என்று குறிப்பிடுகின்றன: மனிதர்களுக்குத் தெரியாதது என்றும் சொல்லுகின்றன. 1911க்கு முன்பும் நிச்சயமாக, இருந்த வேதங்கள் உலகில் ஏழு தீவுகள் உள்ளன என்று எப்படிச் சொல்ல முடிந்தது? இக்கேள்விக்கான விடை, இந்த ஏழு தீவுகளையும் படைத்த கடவுளுக்கு அது தெரியும். அவர் வேதங்களின் மூலமாக அதைச் சொல்லியிருக்கிறார் என்பதே!

மேற்சொன்ன எடுத்துக்காட்டுகளே போதுமானவை. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் சமீபத்தில் வெளியாகியிருக்கிற இயற்கையின் பல இரகசியங்கள் வேதங்களில் காணப்படுகின்றன. நுண்ணிய சோதனைகள் மூலம் இணையற்ற முயற்சிகளுடன் அறிவுக்கூர்மை மிக்க விஞ்ஞானிகள் இவற்றையெல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

தொடரும்..

## வாழ்த்துக்கள்
## “யுவ புரஸ்கார் விருது”




திரு. நடேசன் - திருமதி. பாமா நடேசன் இருவரும் வேதபாரதியில் ஆரம்ப காலந்தொட்டு உறுப்பினராயிருந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகின்றனர். அவர்களின் புதல்வன் திரு. லோகேஷ் ரகுராமன். இவர் மே 23 ம் தேதி 1990 ம் ஆண்டு திருவாரூர் மாவட்டம் நன்னீலம் வட்டத்தில் உள்ள நாடாகுடி என்னும் கிராமத்தில் பிறந்தார். பெங்களூரில் உள்ள தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரிந்து வரும் இவர், பல இணைய இதழ்களில் இவரது சிறுகதைகள் வெளிவருகின்றன. விஷ்ணு வந்தார் புத்தகம் லோகேஷ் ரகுமானின் முதல் சிறுகதைத் தொகுப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

“விஷ்ணு வந்தார்” புத்தகத்தை எழுதிய லோகேஷ் ரகுராமனுக்கு சாகித்ய **“யுவ புரஸ்கார் விருது”** அறிவிக்கப்பட்டுள்ளது. வெளியான முதல் சிறுகதை தொகுப்பிற்கே சாகித்ய விருது பெற்றுள்ளார் தமிழ்நாட்டைச் சேர்ந்த லோகேஷ் ரகுராமன்.

வேதபாரதி

## இரங்கல் செய்தி



ஊரப்பாக்கம் வேதபாரதி உறுப்பினர் திரு.சங்கரநாராயணன் அவர்களின் தந்தை **திரு. சுப்பிரமணியம்** அவர்கள் 24.06.2024 அன்று சிவலோக பதவி அடைந்தார்கள். அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை வேதபாரதியின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம்.

# பூக்களோடு பேசுவோம்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்“

## கந்தனுக்குரிய கடம்ப மலர்”

கடம்ப மலர் என்றவுடன் எனக்கு முதலில் நினைவுக்கு வந்தது கந்தலங்காரத்தில் இடம் பெற்றதும், நாம் அனைவரும் அறிந்ததும், முணுமுணுப்பதுமான
“நாள் என் செய்யும், வினைதான் என் செய்யும்,
எனை நாடி வந்த கோள் என் செய்யும்,
கொடுங்கூற்று என் செய்யும், குமரேசர் இரு தாளும்,
சிலம்பும், தண்டையும், சண்முகமும்
தோளும் கடம்பும் என் முன்னே வந்து தோன்றிடினே”
என்றபாடல் வரிகள்தான்.



கடம்பமலர் முருகனுக்குரிய மலராகத்தான் சங்க இலக்கியங்கள் விவரிக்கின்றன. ஆனால் உள்ளம் கவர் கண்ணனும் தன் கோப, கோபியர்களுடன் ஆனந்தமாக ஆடிப்பாடிக் கழித்த வனமும் கடம்பவனம்தான் என்கிறது பாகவத புராணம். கண்ணனுக்குரிய கடம்பும், கந்தனுக்குரிய கடம்பும் ஒன்றா, வெவ்வேறா என்றால், தாவரவியல் “வெவ்வேறு” என்கிறது. சங்க இலக்கிய வரிகள் வர்ணித்துள்ள கடம்பமலர் அமைப்பிற்கான விவரங்களும் வெவ்வேறாகவே உள்ளன. கந்தனுக்குரிய கடம்பமலரின் அமைப்பினை மிகத்தெளிவாகவே குறிப்பிட்டுள்ளது.

சங்க இலக்கியம் கந்தனுக்குரிய கடம்பமலர். வெள்ளைநிறப் பூக்களைக் கொண்ட “வெண்கடம்பு” (BarrintoniaCalyptrata) என்றும் சிவந்த நிறப் பூக்களைக்கொண்ட “செங்கடம்பு” (Barrintonia Actangula) என்றும் கூறுகிறது. ஆனால் இந்தப் பூக்கள் அணிந்த



கந்தபிரானை யாராவது எந்த ஆலயத்திலாவது பார்த்ததுண்டா என்று கேள்வி எழுப்புகிறார். “இதழ்” எனும் வலை தளத்தில், தமிழரசி என்பவர் நியாயம்தான். யாரும் பார்த்திருக்க மாட்டோம் என்றேதோன்றுகிறது. இத்தகைய கடம்பவனம் இப்போது எங்கே இருக்கிறது? யாராவது தெரிந்தால் சொல்லுங்கள். பூச்சந்தையில் கூட இது கிடைக்கிறதா என்று தெரியவில்லை. இது ஒரு ஆராய்ச்சிக்குரிய விஷயம்தான்.

வாலியை நோக்கி ஸ்ரீ ராமர் விடுத்த அம்பு, ஏழு கடம்ப மரங்களைத் (மரா மரம் என்றும் குறிப்பிடுகிறார்கள்) துளைத்துக்கொண்டு சென்றுதான் வாலியை வீழ்த்தியதாக நாம் கேட்டிருப்போம், படித்திருப்போம். திரேதாயுகத்தில் ஸ்ரீ ராமர் தனது அப்பினால் துளைத்த கடம்ப மரங்களும், துவாபரயுகத்தில் கண்ணன் கோப கோபியர்களுடன் ஆனந்தமாகப் பொழுதினைக் கழித்த கடம்பவனமும் திருமுருகாற்றுப்படை, கந்தரலங்காரம் ஆகிய தமிழ் இலக்கியங்களில் கந்தனுக்குரிய கடம்ப மலர்கள் நிறைந்த கடம்ப மரங்களும், **Cadamba** குடும்பத்தைச் சேர்ந்த வெவ்வேறு வகைகள் என்றேதோன்றுகின்றன. சரி இப்போது கண்ணனுக்குரிய கடம்ப மலரைப் பார்ப்போம்.

தாவரவியல் பெயரிலேயே “கடம்பா” என்கிறஇணைப்பைக் கொண்டுள்ள **Neolamarchia Cadamba** என்கிறமலர்களைக் கொண்டுள்ள மரம் கடம்பமரம் என்றும், அந்த மரங்கள் நிறைந்திருக்கும் காடுகள் கடம்பவனம் என்றும், அந்த வனமே கண்ணன் தன் சிறுபிராயத்தை, கோப கோபியர்களுடன் ஆனந்தமாக



கழித்த கடம்பவனம் என்றும் கூறப்படுகிறது. இந்த கடம்ப மலரின் அமைப்பு முற்றிலும் வேறானது. கண்ணனுக்குரிய கடம்பமலர் வெள்ளையும் மஞ்சளுமாக, தனித்தனியாக, உருண்டையாக மரம் முழுவதும் பூத்திருக்கும். இந்தமரம்தான் முருகன் குடிகொண்டுள்ள பழனிமலையில் சித்திரைமாதக் கடைசியிலிருந்து, வைகாசி மாத தொடக்கத்திலும் பூத்துக்குலுங்குவதை பக்தர்கள் கண்டு ரசித்து, பறித்து தாங்களும் சூடிக்கொண்டு கந்தனுக்கும் மாலையாகக் கட்டி அணிவிக்கிறார்களாம். இதற்கு அபார மருத்துவ குணங்களும் இருப்பதாக நம்பிக்கை கொண்டுள்ளனர்.

சங்க இலக்கியம் கந்தனுக்குரியதாக வர்ணித்துள்ள வெண்கடம்பு மலரோ, செங்கடம்பு மலரோ, அல்லது கண்ணனுக்குரிய மலராகக் கருதப்படும் வெண்மஞ்சள் மலர் கொண்ட கடம்போ எதுவானால் என்ன? பக்தி நிறைந்த மனதோடு, தெய்வங்களை பூஜிக்க வேண்டும் என்பதுதான் முக்கியம் அல்லவா? இன்னுமொரு ஆச்சரியமான விஷயத்தையும் இக்கட்டுரையில் பதிவிடுவது அவசியம். சிக்கல் சிங்காரவேலன் ஸ்தலத்தின் அருகே நவ கடம்ப ஸ்தலங்கள் இருக்கின்றனவாம். அவற்றில் முருகனே ஸ்தாபித்த பஞ்ச கடம்ப ஸ்தலங்களும் அடங்குமாம். கடம்ப மரத்தை ஸ்தலமரமாகக் கொண்ட சிவாலயங்கள் இவை. அவசியம் தரிசிக்க வேண்டிய ஸ்தலங்கள் என்றகுறிப்பிட்டிருந்தார். சிவாலயம் என்றதும் நினைவுக்கு வருகிறது.

அடுத்து **“கயிலையின் பனித்தூறல்”** என்று அழைக்கப்படும் **நில சம்பங்கிப் பூவோடு** பேசுவோம்.

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 43

கடந்த சில மாதங்களில் ஓரளவிற்கு உங்களுடைய மகன் அல்லது மகளின் பலம், பலஹீனம் இவற்றைஆராய நீங்கள் முயற்சி செய்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

பொதுவாக பெண் குழந்தைகள் “முதுகலை பட்டம்” (Post Graduate) முடித்து விட்டால், உடனே ஒரு வேலை அடுத்து திருமணம் என்றுதான் பெற்றோர்களின் திட்டமாக இருக்கும்.

மகள், “ஒரு வருஷம் வேலை” என்று அடம்பிடிக்க, “நாங்க பாட்டுக்கு ஜாதகம் பார்க்கிறோம். உடனே அமைஞ்சுடுமா என்ன?” என்று பெற்றோர்கள் “தாஜா” செய்ய கொஞ்சம் இழுபறியாகத்தான் பல வீடுகளில் உள்ளது.

திருமணம் எப்பொழுது செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும் என்று கூறுவது என் பணியல்ல. அதற்கு உங்கள் குடும்ப உறுப்பினர்கள், பெரியோர்கள், “வேதபாரதி” போன்றசமூக சேவை செய்யும் இயக்கங்கள் ஆகியோர் உங்களை வழிநடத்த தயாராக உள்ளனர்.

நான் உங்களை கேட்கப் போவது ஒரு கேள்வி மட்டுமே. “வீடு – வேலை” (Work & Home) இரண்டையும் யாரையும் சாராமல் உங்கள் மகள் அல்லது மகனால் நடத்திக் கொள்ளுமளவிற்கு பயிற்சி உள்ளதா? என்று உற்று நோக்குங்கள்.

மாமியாரையும், பெற்ற தாயையும் சாராமல், (அவர்கள் தலையில் வேலைகளை கட்டாமல்)

பணிக்குச் சென்று கணவர், குழந்தை, வீடு இவை மூன்றையும் பேணுவதற்கான, “உணர்வுசார் நுண்ணறிவு” (Emotional Intelligence (EI)) அவர்களிடம் உள்ளதா?

முக்கியமாக தன் உடம்பையும் பேணிக்காக்க தெரிந்து வைத்திருக்கிறார்களா? கவனியுங்கள். “தலைவலி, அம்மா காபி, அம்மா மருந்து” என்று குரல் கொடுக்கும் “டைப்பா” உங்கள் குழந்தைகள்? ஆபீஸிலிருந்து வந்தவுடன் செருப்பை கழற்றி வீசி, தன் அறைக்கு சென்று கதவை மூடிக் கொண்டு விடும் “டைப்பா”? யோசியுங்கள்.

தயவு செய்து இருபாலருக்கும் இது பொருந்தும் என்று புரிந்து கொள்ளுங்கள்.

ஆண் பிள்ளை ஆனால் “ஓ.கே.” ஆனால் பெண் குழந்தை “நோ சான்ஸ்” என்று இன்றைய சூழலில் எண்ணுவது தவறு. ஒரு பெண் வேலைக்கு செல்ல அனைத்து உதவிகளும், படிப்பு, மேற்படிப்பு, “ஸ்கூட்டி” வாங்கித் தருவது என்று உங்கள் பாசமழை உங்களுக்கு “ஓ.கே.”

ஆனால் திருமணம் என்று வந்து விட்டால் அடித்தளம் நீங்கள் சரியாகப் போடாமல் செய்து கொடுத்து விட்டு, பிறகு “கோர்ட்டு – கேஸ்” என்று அலைவது மிக, மிக அதிகமாக இன்று நடக்கின்றது. காரணம் பெற்றோர்களின் புரிதலின்மை.

திருமதி. இந்திரா நூயீ (IndraNooyi) எழுதியுள்ள புத்தகத்தை நீங்களும் படித்து, பெண்ணையும் படிக்க வையுங்கள். உங்கள் மகனுக்கும் அது தேவையென்று படிக்க வையுங்கள்.

திருமண வாழ்க்கையில் அன்பு, காதல், உறவு எல்லாம் முக்கியம் தான். ஆனால் திருமணம் நிலைத்து நூறாண்டு காலப் பயிராக தழைத்தோங்க இரண்டு விஷயங்கள் தான் தேவை.

"ஒழுக்கம் மற்றும் பொறுப்பு" (Discipline and Responsibility) இதோடு மசாலாவாக சேர்ப்பது "தொடர்பு திறன்", (Communication Skill), யாரிடம் எப்படி பேசினால் பணிவும், தெளிவும் பிறக்கும், வேலையும் நடக்கும் என்பதை இருபாலரும் புரிந்து கொள்ள வேண்டும்.

கூட்டுக் குடித்தனத்தினால் பிரச்சனை என்பது மாறி இன்று தனிக்குடித்தனத்தில் தான் விவாகரத்து (Divorce) அதிகம். காரணம் இருபக்கமும் இருக்கும் வளர்ப்பு முறை தவறுகள்.

உடை, உணவு, குளிப்பது, வீட்டைச் சுத்தமாக வைப்பது, துணி துவைப்பது, பரிமாறுவது, விருந்தினர்களை வரவேற்பது என்று பல்வேறு விஷயங்களின் கலவைதான் திருமணம்.

*ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்*
*போற்றலு ளெல்லாம் தலை"*

*(அதிகாரம் – 90 குறள் – 891)*

"தம்முடைய நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறவர்கள், பாதுகாக்க வேண்டிய பொருட்கள் அனைத்திலும் மிகச் சிறந்த பொருள் என்பது தம்மினும் வல்லமையுள்ளவர்களுடைய திறமையைப் பயன்படுத்திக் கொள்ள தவறிவிடாமையாகும்" என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

தொடரும்...

**குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும்**
**ஸ்லோக வகுப்புகள் ஆன்லைன் மூலமாக**
ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன்,
ஸ்ரீமதி நீலா முரளி, மதுரை
தொடர்புக்கு : **9443489129**

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# இராமாயணம் தரும் படிப்பினை

*சென்றமாத தொடர்ச்சி...*

*மொத்தத்தில் விதி வலியது. அதை வென்றவர்களை விரல் விட்டு எண்ணலாம். அவதார மூர்த்தி ஸ்ரீராமருக்கு இந்தச் சங்கடம் வந்துள்ளது.*

*கவர்தன் என்றஅரக்கனைச் சந்திக்கின்றனர். பிறகு அவனையும் அழித்து முக்தி கொடுக்கின்றனர். இறப்பதற்கு முன்பு சுக்ரீவன் என்றவானர வீரன் இருக்கின்றான். அவனது உதவியுடன் சீதையைத் தேடும் முயற்சியில் இறங்கு என்கிறான். பிறகு மதங்க முனிவரின் மாணவி சபரியைச் சந்திக்கின்றனர். மிகவும் வயதானவள். இராமருக்காக தான் சேகரித்து வைத்த கனிகளைக் கொடுக்கின்றாள். இராம பக்தை அவரிடம் மிகுந்த அன்பு கொண்டவள். அவளும் இராமரிடம், சூரிய குமாரராகிய சுக்ரீவனைத் துணையாகக் கொண்டு சீதையைத் தேடுவாய் என்று கூறிவிட்டு இரு சகோதரர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே முக்தியடைந்தாள். பிறகு பம்பை நதிக் கரையை நோக்கிச் சென்றார்கள்.*

*சபரியின் ஸ்தூல உடல் மறைந்து அது ஒரு ஒளி போல் வானில் கலந்தது. கூப்பிய கையுடன் இராமனும், லட்சுமணனும் இதைப் பார்த்துப் பரவசமடைந்தனர்.*

*எந்த தேசத்தில் இராமாயணம் போன்றகாவியம் பிறந்ததோ அங்கு தீண்டாமை, உயர்வு, தாழ்வு என்பதற்கு இடமில்லை. கண்கூடாக இங்கு அவதார புருஷர் இராமர் எப்படி சபரியிடம் நடந்து கொண்டார் என்பதைப் பார்த்தோம். சபரியின் பக்தி தாஸ பக்தி. அவளுக்கு ஸ்ரீ ராமர் தான் உலகம். மதங்க முனிவர் சித்தி அடைந்தது முதல் அந்த உலகமாகிய இராமர், இலக்குவன் வரும் வரை தன் உயிரைப் பாதுகாத்து, வழிமேல் விழிவைத்து இராமரைப் பார்க்க ஒரு தபமே*

செய்தாள். சபரியின் பரிவு, பக்தி, இராமனின் கருணை இவையெல்லாம் நமக்கு வழிகாட்டி, பிறகு சபரி கூறியபடி சுக்ரீவனைத் தேடிக்கொண்டு ரிஷ்யமுக பர்வதத்தை நோக்கிச் சென்றனர் இரு சகோதரர்களும்.

இயற்கை வளங்கள் நிரம்பிய பூமியாக இருந்தது ரிஷ்யமுக பர்வதம். மிகவும் அழகாக வளமையாக, ரம்யமாக காட்சி தந்தது. இன்பமோ, துன்பமோ வாழ்க்கையில் அதைத் தனியாக எதிர்கொள்ள முடியாது. ஒரு நல்ல துணை வேண்டும். துணை இருந்தால் இன்பம் ஏற்படும் போது அது பலமடங்கு பெருகும். துன்பம் ஏற்பட்டால் அது பாதியாகக் குறைந்து மனது அமைதியாகிவிடும். இந்த இடத்தில் இராமர் சீதையை நினைத்து மனம் வருந்தினார். இலக்குவன் சமாதானம் செய்தான். அப்போது இராமர், உலகில் துன்பம் மிகவும் கொடியது. அதனால் நாம் நெருங்கிய உறவினர்களிடம் கூட அன்பை வளர்த்துக் கொள்ளக் கூடாது. தாமரை இலை தண்ணீர் போல் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். அல்லது எல்லா உயிர்களிடத்திலும் அன்பை வளர்த்துக் கொள்ளும் மனோ நிலையைப் பெறவேண்டும். அது உயர்நிலை. முயற்சி தான் மனிதனை மேலே கொண்டு செல்லும். தளர்ச்சி நம்மை சோர்வடைய வைத்து அதள பாதாளத்தில் தள்ளிவிடும். அதனால் இப்போது நாம் துன்பத்தை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு சீதையைத் தேடும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று கூறுகிறான் இலக்குவன். துன்பம் என்று வந்துவிட்டால் எல்லோரும் தனது நிலை தடுமாறிவிடுவர். அவதார புருஷர் இராமரும் இதற்கு விதிவிலக்கல்ல என்று தான் இதன் மூலம் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தொடரும்...

**- காந்தாமணி நாராயணன்**

# சென்னை திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோயில்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

*திருமயிலை சிங்காரவேலர் பிள்ளைத்தமிழ் திருமயிலைக் கோவை, சிங்காரவேலர் மாலை; திருமயிலை குகன் பதிகங்கள்; மயிலை சண்முக பஞ்சரத்தினமாலை; அருட்புகழ்; மயிலைச் சிங்காரவேலர் இரட்டை மணிமாலை திருமயிலைச் சிங்காரவேலர் பதிகம்; ஆகிய நூல்கள் இக்கோவில் ஸ்ரீ சிங்காரவேலைரைப் போற்றுகின்றன.*

*திருமயிலைப் பிள்ளைத்தமிழ்; திருமயிலைக் கோவை; திருமயிலை உவமை வெண்பா; திருமயிலை வெண்பா; வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளின் பதிகங்கள்; திருக்குருகூர் ஞானசித்த சுவாமிகளின் பதிகங்கள்; தாச்சி அருணாசல முதலியால் பதிகங்கள்; கி.ஊ.பா. அங்காதர நாவலரின் நூல்கள் ஆகியவை திருமயிலை தெய்வங்களைப் போற்றுகின்றன.*

*'வேதாரண்யம் விளக்கழகு; திருவாரூர் தேரழகு; மாயூரம் கோபுரம் அழகு; திருவிடை மருதூர் தெரு அழகு; திருமயிலை மாடவீதிகள் அழகு" என்பர். மங்குல்மதி தவழும் மாடவீதி மயிலாப்பூரில் என்பது அப்பர் தேவார வரிகள். திருமயிலை உலா என்னும் நூல் "நீரும் மணி மாடவீதிகள்" என்றும் வானளக்கும் பொன் மாடவீதி" என்று புகழ்கிறது.*

*கயிலையே மயிலை*
*மயிலையே கையிலை*

## திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோவில் (௨)

*இக்கோவிலில் 7 என்னும் எண்ணை அடிப்படையாகக் கொண்ட விஷயங்கள் தனிச் சிறப்பாக உள்ளது.*

கபாலீஸ்வரர், வெள்ளீஸ்வரர், காரணீஸ்வரர், மல்லீஸ்வரர், விருபாக்ஷீஸ்வரர், வாலீஸ்வரர்; தீர்த்தபாலீஸ்வரர் என ஏழுசிவன் கோயில்கள் மயிலையில் உள்ளன.

ஏழு பெருமாள் கோவில்கள் ஏழு குளங்கள் என மயிலையில் உள்ளன. இங்குள்ள ஏழு சிவாலயங்களையும் ஒரே நாளில் தரிசித்தால் எல்லாப்பேறுகளும்கிட்டிடும் அதனால் தான், கயிலையே மயிலை, மயிலையே கயிலை என புகழப்படுகிறது.

வாயிலார் நாயனார், திருவள்ளுவர், பேயாழ்வார் அவதரித்ததும் திருமயிலையில்தான்.

உமையவள் உட்பட பல தேவர்கள் வழிபட்ட கோயில் இது.

சிக்கல் திருத்தலத்தில் சக்திவேல் பெற்ற முருகப்பெருமான் இம்மயிலையில் வந்து சிவபூஜை செய்து சிங்கார வேலைப் பெற்றாராம். எனவே இங்கு முருகனுக்கு சிங்கார வேலன் என்ற பெயர் ஏற்பட்டது.

தன்னை வணங்கிய மருகனைச் சிவபிரான் அண்ணனையும் வணங்குமாறு கூறிட, கந்தவேளும் விநாயகரை வழிபட முருகனுக்குத் தனது ஆனந்த நடனத்தை வழங்கினார். இவரே இங்கு நர்த்தன விநாயகராய்க் காட்சி தருகிறார்.

அரக்கர் பலரைக் கொன்ற பாவம் தீர ஸ்ரீராமர் இங்கு வந்து கபாலீஸ்வரரை வழிபட்டுத் திருவிழா எடுத்தார். இன்னும் பல தேவர்கள் இங்குக் கபாலீஸ்வரரை வழிபட்டுப் பேறுபெற்றதை ஸ்ரீ அமிர்த லிங்கத் தம்பிரான் எழுதிய திருமயிலைத்தல புராணம் கூறுகிறது.

தொடரும்....

# தருவின் நிழலில்

## பனை - PALM (Borassus Flabellifer)

*தமிழ்நாட்டின் மாநில மரமாக உள்ள பனை அனைத்து வகை மண்ணிலும் வளரக் கூடியது. வறட்சியை தாங்கி வளரும் தன்மை உள்ளதால் வறண்ட நிலங்களில் அதிகம் காணப்படுகின்றது. பனை புல்லினத்தைச் சார்ந்த பேரினம்.*

*பனை முதிர்வடைவதற்கு 15 ஆண்டுகள் ஆகும். இவை 30 மீட்டர் வரை உயரம் வளரக்கூடியது. நூறாண்டுகள் வரை வாழும் இவற்றிற்கு கிளைகள் இல்லை. பெரும்பாலும் இவை இயற்கையாகவே வளர்பவையாகும்.*

*இளம் பருவ பனைகள் "வடலி" என்றழைக்கப்படுகிறது. பனையின் குருத்தோலைகள் தான் ஆரம்ப காலத்தில் செய்திகளை சேகரிக்கும் "ஓலைச் சுவடிகளுக்கு" பயன்படுத்தப்பட்டன. குருத்தோலைகளால் பாய் முடைதல், கூடைகள் முடைதல், பெட்டிகள் தயாரித்தல் (கருப்பட்டி மிட்டாய்களை விற்பவர்கள் இந்த பெட்டிகளில்தான் கொடுப்பார்கள்) விசிறிகள், பொம்மைகள், கிலுகிலுப்பைகள் தயாரித்தல் ஆகிய சிறு தொழில்களுக்கு முக்கியப் பொருளாக உள்ளது.*

*முதிர்ந்த பனை ஓலைகள் வீடுகளின் கூரைகள் வேய்வதற்கும், மறைவுத் தடுப்புகள் அமைப்பதற்கும் பயன்படுகிறது. தமிழகத்தின் பிரதான இசைக் கருவிகளில் ஒன்றான நாதஸ்வர குழலின் நுனியில் பனை ஓலையைதான் பயன்படுத்துகிறார்கள்.*

*பனையின் ஒவ்வொரு பாகங்களும் மனித வாழ்வில் பயன்படுகிறது. இதனால், "கற்பக விருட்சம்" என்றும் பனை மரம் அழைக்கப்படுகிறது. பதநீர், கருப்பட்டி, வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, நுங்கு, பனங்கூழ், பனமிட்டாய், பனம் பழம், பனை*

*எண்ணெய், பனங்கிழங்கு என பலவகையான உணவுப் பொருட்களை தருகிறது.*

*தன் வாழ்நாளை முடிக்கும் காலத்தில் கூட பனை வீடுகள் கட்டுவதற்கு, மரக்கட்டையாக (வாரை) மற்றும் தூண்களாக பயன்படுகிறது.*

*தமிழக அரசின் கதர் மற்றும் சிற்றூர்த் தொழில் குழும கணக்கின்படி, ஒரு பனைமரம் ஓராண்டில் 150 லிட்டர் பதநீர், 1 1/2 கிலோ ஈர்க்கு, 1கிலோ தும்பு, எட்டு ஓலைகள், 16 நார் முடிகள், 24 கிலோ பனை வெல்லம், இரண்டு கூடைகள், ஆறு பாய்கள் ஆகியவற்றைத் தருகின்றது. பனை, தமிழகத்தில் மட்டும் சுமார் 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பைத் தருகிறது. மனித இனத்திற்கு பனை தரும் பயன்களுக்கு நன்றி செய்யும் விதத்தில் அதன் பெருமையை திருவள்ளுவரும் கூறுகிறார்.*

*தினைத்துணை நன்றி செயினும் பனைத்*
*துணையாக் கொள்வர் பயன்தெரிவார்.*

*அதிகாரம் 11 செய்நன்றி அறிதல், குறள் – 104.*

*பனைமரம் தமிழகத்தில் பல திருக்கோவில்களில் தல விருட்சமாகவும், வழிபடுவோருக்கு அருள் தருகிறது.*

*திருப்பனங்காடு : இவ்வூர் திருவண்ணாமலை மாவட்டத்தில் கலவையிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் சாலையில் வடக்கே 1 கி.மீ. தொலைவில் உள்ளது. அகத்தியர் வழிபட்ட தாளபுரீஸ்வரர் (பனங்காட்டீஸ்வரர்) கிருபாநாயகி மற்றும் அகத்தியர் சீடரும் மகனுமான புலத்தியர் வழிபட்ட கிருபாபுரீஸ்வர் – அமிர்தவல்லி என இரண்டு சிவனும், இரண்டு அம்பாளும் தனித்தனியாக சந்நதிகொண்டு அருள்பாலிக்கிறார்கள்.*

தொடரும்...

**- ஆதிரையன்**


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள்
ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில்
அனுப்புதல் வேண்டும்.
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940



# ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு "ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்" **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646**; ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**ஸ்ரீ M. இராமகிருஷ்ணன் புதல்வர்கள்**
**அறங்காவலர்**
71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

# அயோத்தி - குழந்தை ராமரின் அற்புத தரிசனம் – 2



அயோத்தியின் காவல் தெய்வமாகிய "ஸ்ரீ ஹனுமன்கரி" ஆலய எல்லையில் எங்களை இறக்கிவிட்டுவிட்டார்கள். இதற்கு மேல் வாகனங்கள போவதற்கு அனுமதியில்லை என்பதால் இங்கிருந்து சுமார் 1.5 கி.மீ. தூரம் ஸ்ரீ ராம ஜென்ம பூமி ஆலயத்திற்கு நடந்துதான் செல்ல வேண்டும். முறைப்படி தரிசனம் செய்ய வேண்டும் என்றால், முதலில் நாம் இந்த ஹனுமன் கரி ஆலயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஹனுமனைத்தான் தரிசிக்க வேண்டும். இதற்கு அற்புதமான வரலாற்றை விவரித்தான் ஆட்டோக்காரன் வினு. வாலிப வயது வினு சொன்ன விவரம் என்னவென்றால், ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகத்திற்கு அயோத்திக்கு வந்த ஹனுமானுக்கு ஸ்ரீ ராமரே அயோத்தியில் தங்குவதற்கு இடம் கொடுத்து, "அயோத்திக்கு வரும் என் பக்தர்கள் முதலின் உன்னை தரிசித்தபிறகே என்னை தரிசிக்க வேண்டும்" என்று அறிவித்து விட்டதாகச் சொன்னான். இதனால் தானோ என்னமோ இந்த ஆலயத்தில் எப்போதுமே மகாமகக் கூட்டம் மூச்சுத் திணறும் வகையில், தினம் தினம் லட்சக்கணக்கான ஆஞ்சனேய பக்தர்கள் வந்து தரிசிக்கிறார்கள். ஹனுமன் கரி அயோத்தியில் மிகவும் பிரும்மாண்டமான கோபுரத்துடன் மிகப்பரந்த நிலப்பரப்பில் இருப்பதாகச் சொல்கிறார்கள. சுமார் 75 படிகள் மேலே ஏறி, ஹனுமனை தரிசிக்க வேண்டுமாம்.

எங்களுக்குக் கொடுத்துவைக்கவில்லை.

சரி, குழந்தை ராமரை தரிசிக்கச் செல்வோம். நடந்தோம், நடந்தோம், நடந்து கொண்டே இருந்தோம். இரவு ஏழு மணியாகிவிட்டது. தெருக்கள் விழாக்கோலம் பூண்டிருந்தது. சாலையில் இருமருங்கும் அபாரமான கடைகள் அனைத்திலும் குழந்தை ராமரின் விதவிதமான படங்கள், உருவங்கள், உலோகத்தில், மரத்தில், கட்டவுட்களில் என்று ஒருவழியாக ஸ்ரீ ராமஜென்ம பூமியின் நுழைவாயிலுக்கு வந்துவிட்டோம். இங்கிருந்து உள்ளே குழந்தை ராமர் குடிகொண்டிருக்கும் பளிங்கு மண்டபத்தை அடைவதற்கு, வித விதமான செக்யூரிட்டிகளைத் தாண்டி, பின்னர் ஒரு கி.மீ. தூரம் வளைந்து வளைந்து நடந்து, அப்பாடா பளிங்கு மண்டபத்தின் முதற்படிக்கு வந்துவிட்டோம். மனம் முழுக்க ஸ்ரீ ராமர் நிறைந்திருந்தார் என்றாலும், இதனை சாத்தியப்படுத்திய பாரத பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் விஸ்வரூபம் எடுத்து அனைவர் மனங்களிலும் நிறைந்திருந்தார் என்பதை, சுற்றிலும் பல்வேறு மாநிலமக்கள், “ஜெய்ஸ்ரீராம்” என்று உச்ச ஸ்தாயியில் கோஷம் எழுப்பியதுடன், “ஜெய் போலோ மோடி சர்க்கார் கீ” என்கிறகோஷமும் எழுப்பியதிலிருந்து புரிந்து கொண்டேன்.



பளிங்குப் படியில் கால் வைத்ததுமே, “ராமா, உன் சன்னதிக்கு நிஜமாகவே வந்துவிட்டேனா” என்கிறபிரமிப்புடன் படிகளில் ஏறினேன். மேற்படியில்

ஏறி நின்றதுமே, வில்லேந்திய குழந்தை ராமர் மிகவும் அழகாக, கம்பீரமாக, மகா ஜொலிப்புடன் கண்களில் பதிவானார். அப்படியே அள்ளிக்கொண்டுவிடலாம் போலிருந்தது. அவரது திவ்ய சொரூபத்தை பார்த்துக்கொண்டே, கூட்டத்தில் முன்னேறி பளிங்கு மண்டபத்தின் உட்புறத்தூண்களில் செதுக்கப்பட்டிருந்த தெய்வ உருவங்களின் அழகில் மனம் லயித்தது.

என்ன நேர்த்தி! இதோ ஸ்ரீ ராமரின் திருவுருவத்தின் முன்பு வந்து நின்றாகிவிட்டது. கண்கொள்ளா தரிசனம்! ஸ்ரீ ராமரின் கண்கள் உண்மையிலேயே நம்முடன் பேசினால் மிகையில்லை.

அனைவரும் அவ்வாறே உணர்ந்தனர். பிரமிப்பிலேயே சில வினாடிகள் கரைய, “சலோமாதாஜி” என்று மென்மையாக நகரச் சொன்னாள் அங்கிருந்த பெண் ஊழியர் ஒருவர். கண்களை விட்டு அகலாத குழந்தை ராமரை நெஞ்சில் நிறைத்தபடியே வெளியே வந்து, விழுந்து நமஸ்கரித்து, மீண்டும் படிகளில் இறங்கி, சற்று தூரம் நடந்து, திரும்பிப் பார்த்து, கம்பீரமாக எழுந்து நிற்கும் கோபுரங்களை (ஆம் குட்டி குட்டியாய் பல கோபுரங்கள்) தரிசித்து, இந்த ஜென்மத்தின்பலனை அடைந்து விட்ட திருப்தியுடன், கற்கண்டு பிரசாத பாக்கெட்டை பெற்றுக்கொண்டு “சுப ஆரம்ப்” ஹோட்டலை நோக்கி பயணப்பட்டோம். இனி எல்லாம் சுப ஆரம்பம் தான்போலிருக்கிறது என்று நினைத்துக்கொண்டேன். அடுத்த நாள் சரயு நதிக்கரையில் அமாவாசை தர்ப்பணம்.

காத்திருங்கள்....

## வேதபாரதி வேதபாராயண குழு
## ரிஷிகேஷ் யாத்திரை 10.06.2024 - 15.06.2024

வேதபாரதி பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் ஆசிகளால் கடந்த நான்கு ஆண்டுகளாக ஆன்லைன் மூலமாக வேதம் பயிலும் வகுப்புகள் தொடர்ந்து நடந்து வருகிறது. கும்பகோணம் ப்ரம்ஹஸ்ரீ கைலாச கனபாடிகள் குருஜி தன் சிஷ்யர்களுடன் நூற்றுக்கணக்கான குழந்தைகள் பெரியவர்களுக்கு வேதம் சொல்லிக் கொடுக்கவும் வித்யார்த்திகள் கற்றுக்கொண்டு மிக நன்றாக சொல்லவும், பிரதி மாதம் பௌர்ணமி அன்று பாராயணம் செய்யவும் பயிற்சி எடுத்து உள்ளார்கள்.


வேதபாரதி வேத வகுப்பு குழுவினர் 5ம் ஆண்டு துவக்கத்தை முன்னிட்டு ரிஷிகேஷ் சென்று கங்கை கரையில் வேதபாராயணம் செய்வது என்றும் 4 நாட்கள் ரிஷிகேஷில் தங்கி நித்ய கர்மானுஷ்டங்கள், வேதபாராயணம் தீர்த்த ஸ்ரார்த்தம் செய்யவும் முடிவு செய்து வேதபாரதி பொறுப்பாளர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணன், ஸ்ரீ ரகுநாத் மாமா பொறுப்பில் ஏற்பாடுகள் செய்தார்கள். ஜுன் 10.06.2024 - 15.06.2024 ஆகிய நாட்கள் பயணம், சாப்பாடு தரிசிக்க வேண்டிய இடங்கள் குறித்து திட்டமிட்டார்கள். திட்டமிட்டபடி பயணம், பாராயணம் சிறப்பாக நடைபெற்றது. விரிவான கட்டுரை அடுத்த இதழில் பார்ப்போம்.

தொடரும்...

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar,
1st Main Road, Neelangarai, Chennai - 600 115.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org

## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்



இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்


பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CITY UNION BANK
City Union Bank introduces
" Voice Biometric Authentication"
in CUB All in One Mobile Banking App
in Association with
KAIZEN VOIZ
simple•seamless•secure
DRBT
Explore, Enable, Excel
VOICE
BIOMETRIC
"Your voice is your password"

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/24-26

Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/24-26
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th July 2024



வாழ்க்கையில் எத்துனை துன்பங்களை கடந்த போதிலும்
அதிலிருந்து மீள்வதற்கும், நம்பிக்கை பெறுவதற்கும்
இருப்பது மழலையின் சிரித்த முகம் ஒன்றே...

தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்®

287, 288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன் : 0421 2241829
97862 41829 www.suryajewellers.co.in

To

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.